

உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் நேற்று (31.10.2025) தலைமைச் செயலகத்தில் மேற்கு ஆஸ்திரேலியா வர்த்தகம், சர்வதேச பல்கலைக்கழக கல்வி, குடியுரிமை மற்றும் பல்லின கலாச்சார நலன்கள் அமைச்சர் முனைவர் டோனி புட்டி அவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார். இச்சந்திப்பின் போது, உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ.சங்கர், சென்னையிலுள்ள ஆஸ்திரேலிய துணை தூதர் திருமதி சிளை ஐக்கி, மேற்கு ஆஸ்திரேலிய வர்த்தக ஆணையர் முனைவர் இயன் மார்டினஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# வள்ளலார் சர்வதேச மாநாடு முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது!

சென்னை, நவ.1-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (31.10.2025) ஆணையர் அலுவலகத்தில் வள்ளலார் சர்வதேச மாநாடு முன்னேற்பாடு பணிகள், திருவேற்காடு, தேவி கருமாரியம்மன் திருக்கோயில் திருப்பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கடலூர் மாவட்டம், வடலூர், திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தில் கடந்த 05.10.2025 அன்று நடைபெற்ற திருஅருட்பிரகாச வள்ளலாரின் 203ஆம் வருவிக்க உற்றநாள் விழாவின்போது "சென்னையில் 10 ஆயிரம் சன்மார்க்க அன்பர்கள் பங்கேற்கின்ற வகையில் வள்ளலார் சர்வதேச மாநாடு நடத்தப்படும்" என அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் நேற்று, வள்ளலார் சர்வதேச மாநாட்டை சிறப்பாக நடத்திடும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து துறை அலுவலர்கள் மற்றும் வடலூர் தலைமை சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் நிர்வாகிகளின் கருத்துகளை கேட்டறிந்தார்.

இக்கூட்டத்தில் மாநாட்டு பணிகளை ஒருங்கிணைந்து மேற்கொள்ளும் வகையில் துறையின் சார்பில் குழுக்கள் அமைத்தல், வெளிநாடுகளிலிருந்து வருகை தரும் சன்மார்க்க அன்பர்களுக்கு வசதிகளை செய்து தருதல், வள்ளலாரின் நெறிகளை பரப்பிடும் கண்காட்சி அமைத்தல், இலக்கிய போட்டிகளை நடத்தி பரிசுகள் வழங்குதல், கருத்தரங்கம், சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல், அன்னதானம் வழங்குதல், சிறந்த சன்மார்க்கிகளுக்கு விருதுகள் வழங்கி சிறப்பு செய்தல், மாநாட்டு மலர் வெளியிடுதல் போன்ற நிகழ்வுகளோடு மாநாட்டை நடத்துவது குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. சன்மார்க்க சங்கங்கள் அனைத்து பணிகளிலும் துறையோடு ஒருங்கிணைந்து பணியாற்றிட உறுதியளித்தனர்.

அதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பெருந்திட்ட வரைவு (Master Plan) மற்றும் தனித்துவமான திட்டத்தின் (ICONIC PROJECT) கீழ், திருவேற்காடு, தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் ரூ. 71 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திருப்பணிகளின் முன்னேற்றம் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார். அனைத்து பணிகளையும் குறித்த காலத்திற்குள் முடித்து குடமுழுக்கு நடத்திடும் வகையில் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் முனைவர் துரை.ரவிச்சந்திரன், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, கூடுதல் ஆணையர்கள் திருமதி சி.ஹரிப்ரியா, திருமதி மா.கவிதா, திருமதி கோ.செ.மங்கையர்க்கரசி, திருமதி சி. கல்யாணி, ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் சுகிசிவம், திருமதி தேச மங்கையர்க்கரசி, இணை ஆணையர்கள் திருமதி இரா.வான்மதி, திருமதி சி.ஜோதி, திருமதி கி.ரேணுகாதேவி, திருமதி ஜ. முல்லை,

அ.அருணாச்சலம், திருமதி பெ.க.கவெனிதா, கண்காணிப்பு பொறியாளர் சச்சிதானந்தம், வடலூர் தெய்வ நிலையத்தின் அறங்காவலர் குழுத் தலைவர் க.அழகானந்தன், அறங்காவலர்கள் மு.கிஷோர் குமார், செ.கனகசபை, வடலூர் தலைமை சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் தலைவர் அருள் நாகலிங்கம், நிர்வாகிகள் வெங்கடேசன், செந்நெறி தண்டபாணி, உதவி செயற்பொறியாளர் ஞானகுரு, செயல் அலுவலர் ஜெ.ராஜா சரவணகுமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடந்த மாவட்ட இளைஞர் அணி ஆலோசனை கூட்டத்தில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி சிறப்புரை ஆற்றினார். உடன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜே.எல்.ஈஸ்வரப்பன், மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர் அப்துல் மாலிக், மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் துரை மஸ்தான், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கள்டி.ஆர்.ரவிகாண்டீபன், சித்திக் பாஷா, பிரசாத் மற்றும் ஒன்றிய நகர,கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கடந்த ஆண்டு மட்டும் தொழிலாளர் பிரதிநிதிகள் – நிர்வாகத்தினருக்கிடையே

# 675 தொழிற் தகராறுகளில் சுமுகமான முடிவு!

## அமைச்சர் சி.வி.கணேசன் தகவல்!




கடலூர், நவ.1-

கடந்த ஆண்டு மட்டும் தொழிலாளர் பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகத்தினருக்கும் இடையே 675 தொழிற்தகராறுகளில் சுமுகமான முடிவை தமிழக தொழிலாளர் நலத்துறை கண்டுள்ளது என தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் தெரிவித்துள்ளார்.

வாகன உற்பத்தி துறையின் மனிதவளம், திறன் மேம்பாட்டுத் துறை அலுவலர்கள் மாநாடு சென்னை கோவளத்தில் தனியார் விடுதியில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் தலைமையில் நடைபெற்றது.

மாநாட்டில் அமைச்சர் சி.வி.கணேசன் பேசியதாவது:

2030 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சி அடைய வேண்டும் என்பதாகும். அந்த பொருளாதார வளர்ச்சி அடைய தொழில் வளர்ச்சி தான் அடிப்படை ஆகும்.

இன்றைய தினம் அதற்கான கூட்டமைப்புகளை தமிழ்நாட்டில் நமது முதலமைச்சர் அவர்கள் உருவாக்கியுள்ளார். அதனால் தான் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி இந்தியாவில் எங்கும் இல்லாத அளவில் 11.19 விழுக்காட்டை எட்டியுள்ளது.

மத்திய புள்ளியியல்-திட்ட அமலாக்கத்துறை சார்பில் நடத்தப்பட்ட தொழிற்சாலைகள் ஆண்டு கணக்கொடுப்பு 2023-2024 இன்படி இந்தியாவிலேயே தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் முன்னணியில் இருந்து வருகிறது.

இதை சொல்வதற்கு காரணம் தமிழகத்தின் கட்டமைப்பு முதலீட்டாளர்களுக்கு ஏற்புடையதாக இருக்கிறது. எங்களது தொழிலாளர் துறையும் ஒரு காரணம் என சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

கடந்த ஆண்டு மட்டும் எங்களது துறையைச் சார்ந்த சமரச அலுவலர்கள் தங்களது திறன்மிக்க செயல்பாட்டின் வழியாக தொழிலாளர் பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகத்தினருக்கும் இடையே சமரசம் மேற்கொண்டு 675 தொழிற் தகராறுகளில் (Dispute) சுமுகமான முடிவை கண்டுள்ளது.

இதுபோன்ற கூட்டங்கள், கருத்தரங்குகள், திறன் பயிற்சிகள் வழியாக, வாகன தொழிலில் வளர்ந்து வரும் தேவைகளுக்கு ஏற்ப திறன்களை மேம்படுத்திக் கொள்ளலாம் எனவும், தொழில் மாற்றத்தின் அடுத்த நிலைக்கு நம்மை தயார்படுத்திக் கொள்ளலாம்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

